**மார்ச் – 24**

**"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." - எபி 13 : 5**

பிறகு ஏன் மனுஷர் நமக்கு என்ன செய்யலாம் என்பதைக் குறித்து நாம் பயப்படவோ அல்லது கர்த்தரின் வேலை சம்பந்தமாக சாத்தானோ அல்லது வேறு எந்தத் தீய சக்தியோ அதை மேற்கொள்ளுவது போல எண்ணித் துயரப்படவோ வேண்டும்? ஆனாலும், நம்முடைய ஆர்வத்தினால் மட்டுமல்ல, ஆனால் நமது விவேகத்தினாலும் நமது சிரத்தையைக் காண்பிக்க வேண்டியது நம்முடையதாயிருக்கிறது. ஆகையால் முழுப் பொறுப்பும் நம்மேல் இருக்கிறது போல எண்ணி, கர்த்தரின் வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் முழுப் பாரமும், பொறுப்பும் அவரில் இருப்பதை நமது இருதயத்தில் கண்டுகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். வெகுகாலத்துக்கு முன்பு, "என் வேலை முடியும் வரை நான் சாவாமையுள்ளவன்" என்று யாரோ ஒருவர் சொன்னார். கர்த்தரின் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லோருக்கும் இது பயிற்சியால் உண்மையானது என்று நாம் நம்பலாம். "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது". **-Z ’03, 41 (R 3144)**

எல்லா பூமிக்குரிய பொருட்களின் நஷ்டத்தின் மத்தியில், கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறவன், தன்னுடைய நஷ்டங்களுக்கு மிஞ்சிய ஈடு செய்யும் ஆசிர்வாதத்தைக் காண்கிறான். அனுதாபத்திலும், உயர்வாக மதிப்பதிலும், ஒத்துழைப்பிலும் கர்த்தரின் சமூகம் இருப்பதை உணர்வது (உலகம் அறியாததும், கொடுக்கக் கூடாததும், எடுத்துக் கொள்ளக் கூடாததுமான இந்த உணர்வு) அவனுடைய துக்கங்களை சந்தோஷமுள்ளதாக்குகிறது. ஏனென்றால், தேவன் தன்னோடு இருக்கிறார் என்றும், தன்னை விட்டுவிட மாட்டார் என்றும், ஏமாற்ற மாட்டார் என்றும், கைவிட மாட்டார் என்றும் அவன் அறிந்திருக்கிறான். **P ’32, 30.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 28:15; யாத் 33:14; எண் 6:24-26; உபா 31:6,8; யோசு 1:5,7,9; 1நாளா 28:20; சங் 37:25; ஏசா 41:10-13; 49:13-16; மத் 28:20; யோவா 14:1-3; 16-18,26; 16:7,13; 2கொரி 13:14.

**கோபுர வாசிப்பு : Z ’14, 295 (R 5547).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எந்த அனுபவங்கள் கர்த்தருடைய தற்போதைய உதவியைக் காட்டின? நான் அவற்றை எவ்வாறு ஏற்றுக்கொண்டேன்? அதன் பலன் என்ன?